# புதிதான ஒரு வரலாறு

*புதிய காற்றின் சுவாசம் ஒன்று நடபடிகளினூடே வீசுகின்றது - இது உள் மூச்சிழுப்பதற்கு வித்தியாசமான, உணர்வெழுச்சியூட்டும் நறுமணமாயிருக்கின்றது. இதற்கு முன்னால் குறிப்பாய்மட்டும் உரைக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி களை மக்கள் அநுபவித்தார்கள். இப்புத்தகம் வளருகையில்/ இப்புத்தகத்தைப் படிக்க, தேவனுடன் மனித குலத்தின் உறவு என்ற வரலாற்றுச் சாலையில் மேற்கொள்ளும் திருப்பம் கண்டு இதை வாசிப்பவர் திகைப்படைகின்றார்.*

*மத வாழ்வு பற்றிய ஒவ்வொன்றும் திடீரென்று மாறு படுகின்றது. இயேசுவைக் கிறிஸ்து என்று விசுவாசித்தவர்களின் வாழ்க்கையில் மாற்றங்கள் பல நிகழ்ந்தன. இச்செயலூக்கங்கள் யாவற்றுக்கும் காரணம் என்னவாயிருந்தது?*

*அப்போஸ்தலர்கள் உணர்வெழுச்சி மிக்க தனிச் சிறப்பான வர்களாய் இருந்தார்கள். அவர்களின் எண்ணப் போக்கும், சிந்தனையின் ஆவியும் மற்றும் இருதயமும் கவனிக்கத் தக்க விதத்தில் வித்தியாசப்பட்டதாயிருந்தன. முன்பு அவர்கள் ஆர்வக் குறைவு, களைப்பு, தன்னம்பிக்கையின்மை, குழப்பம் மற்றும் ஏமாற்றம் ஆகியவை உள்ளவர்களாய் இருந்தார்கள். இந்த அப்போஸ்தலர்கள் உணர்வெழுச்சி, போர்குணம், தைரியம், தன்னம்பிக்கை, ஊக்கம் மற்றும் மேகத்தில் பரலோகத்திற்குச் சென்றதைக் கண்டிருந்த ஒருவர் மேல் இடைவிடாத நேர்மைக்குணம் ஆகியவை கொண்டவர்களாய் இருந்ததாக, நடபடிகள் சித்தரிக்கின்றது. அவர்கள் அவ்வர லாற்றைக் கூறுவதற்கும், கேட்கின்ற யாவருக்கும் நற்செய்தி யைப் பிரசங்கிப்பதற்கும் தயாராக இருந்தார்கள். யூதத் தலைவர்கள், ஆசாரியர்கள், வேதபாரகர்கள் மற்றும் சனதெரீன் சங்கத்தாரும் கூட பய உணர்வடையும் அளவுக்கு அவர்கள் மிகக் குறுகிய காலத்திலேயே தைரியமும் உறுதிப்பாடும் உடையவர்கள் ஆனார்கள். அவர்களின் கண்காணும் எல்லைக் குள்ளாகவே மாபெரும் உபத்திரவம், மரணம் அல்லது புதிய சீஷர்களுக்குச் சிறைத்தண்டனை ஆகியவை கூட இருந்தன.*

முன்பு மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு விசுவாசம் நிறைந்தவர்களாய் இருந்த சீஷர்கள் இப்பொழுது ஒரு புதிய உடன்படிக்கைக்கு விசுவாசம் நிறைந்தவர்களாய் இருந்தார்கள். அவர்களின் ஆராதனை ஆவியோடும் உண்மையோடும் இருந்தது, அவர்களின் ஆவிக்குரிய ஊழியமானது இருதயத்திலிருந்து வந்தது, அவர்களின் போதனைகள் இயேசுவிடம் இருந்து ஊற்றெடுத்தது, அவர்களின் உண்மைத் தன்மையானது ‘‘மரணபரியந்தம்’’ உண்மையாயிருத்தல் ஆனது, மற்றும் அவர்களின் ஐக்கியமானது குடும்ப உறவு போல வளர்ந்தது. அவர்களின் வாழ்வில் தீர்க்கமான மாற்றங்கள் இடம் பெற்றன, இந்த மாற்றங்களை விளக்கிக் கூறும் பதிவேடாக நடபடிகள் உள்ளது.

சீஷர்களின் ஆவிக்குரிய வாழ்வில் எது பிரவேசித்து அவர்களுக்கு புத்துயிர்க்கப்பட்ட சக்தியையும் உற்சாகத்தையும் கொடுத்தது? ஏவப்பட்ட அப்போஸ்தலர்களின் மூலம் ஒரு புதிய உயில் அல்லது உடன்படிக்கையானது வெளிப்படுத்தப் பட்டிருந்தது, அது இயேசுவின் சிலுவை மரணத்தினால் செயல்படத் தொடங்கியது.

## அவர்களின் பிரசங்கித்தல் புதிதாய் இருந்தது

இயேசுவைக் கர்த்தராகவும் கிறிஸ்துவாகவும் சீஷர்கள் பிரசங்கிக்கத் தொடங்கினார்கள். இந்த மாற்றங்களின் தொடக்கத்திலேயே பேதுரு, தேவன் இயேசுவைக் கிறிஸ்துவாக ஏற்படுத்தினார் (அப். 2:36) என்று அறிவித்திருந்தார். “கிறிஸ்து” என்பது ஒரு உரிப்பெயர் அல்ல; யோசேப்பினிடம் தூதன் அந்தப் பிள்ளைக்கு இயேசு என்று பெயரிடும்படிக் கூறியிருந்தார் (மத்.1:21). இயேசு உயர்த்தப்பட்ட ஒரு பணியின் இயற்பெயராகவே “கிறிஸ்து” என்பது உள்ளது (பிலி. 2:9-11). அவ்வார்த்தை “அபிஷேகிக்கப்பட்டவர்” - அரசராக இருக்க அபிஷேகிக்கப்பட்டவர் - என்று அர்த்தப் படுகின்றது. பழைய ஏற்பாட்டு எபிரெய வார்த்தையாகிய “மேசியா” என்பதன் சிந்தனையையே இது பிரதிபலிக்கின்றது. இயேசு, தேவனுடைய வலது புறத்தில் அரியணையில் வீற்றிருக்கின்றார் என்று

*சீஷர்கள் பிரசங்கித்தார்கள்; ஆகையால் அவர் கிறிஸ்துவாக, அபிஷேகிக்கப்பட்ட அரசராக இருந்தார்.*

*"கர்த்தர்" என்றால் "எஜமானர்" என்று அர்த்தமாகின்றது; ஆகையால் கிறிஸ்து ஒருவரே அதிகாரமுள்ளவராக இருக்கின்றார். இயேசு தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலினால் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் தமக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறினார் (மத். 28:18). தேவன், இயேசுவைக் கர்த்தராகவும் கிறிஸ்துவாகவும் ஆக்கினார் என்று பதிவு செய்யப்பட்ட முதல் சுவிசேஷப் பிரசங்கத்தில் பேதுரு அறிவித்தார் (அப். 2:32-36). இந்த உண்மையைப் புதிய கிறிஸ்தவர்கள் எல்லா ஊக்கத்துடனும் வைராக்கியத்துடனும் பிரசங்கித்தார்கள், ஏனெனில் ஆபிரகாமின் நாட்களில் இருந்து அவர்களின் யூத முன்னோர்களுக்கு தேவன் செய்திருந்த வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் இயேசு என்ற மனிதர் நிறைவேற்றியிருந்தார் என்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்தார்கள்.*

*நடபடிகள் முழுவதிலும் காணப்படும் திறவுகோல் வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்கள் இந்த உரிமைகோரு தலைத் தொடர்கின்றன. கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்க தரிசனங்கள் இயேசுவுக்குள் நிறைவேற்றப்பட்டதாகப் பேதுரு உரிமைகோரினார் (அப். 3:18). மேலும் அவர், இயேசுவே "புறக்கணிக்கப்பட்ட கல்லாக" இருந்தவர் ஆனால் "மூலைக்குத் தலைக்கல்லானவர்" என்றும் கூறினார் (அப். 4:11). மற்றும், அவராலேயன்றி வேறொருவராலும், உறுதியாகவே வேறு எந்த நாமத்தினாலும் இரட்சிப்பு இல்லை என்றும் உரிமைகோரினார் (அப். 4:12). பின்னாளில், சனதெரீன் சங்கத்தாருக்கு முன்பாகப் பேதுரு, இயேசு தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப் பட்டார் (இது அதிகாரம் உள்ள ஒரு இடமாக, ஆளும் அரசருக்குரிய ஒரு இடமாக உள்ளது) என்றும் அவரே "அதிபதியாகவும் இரட்சகராகவும்" இருக்கிறாரென்றும் உரிமை கோரினார் (அப். 5:31). யூதக் கல்விமான்கள் மற்றும் தலைவர்கள் அடங்கிய இந்த மாண்புமிக்க குழுவினரிடத்தில் கூடுதலாக அவர், இஸ்ரவேல் நாட்டாருக்கும், அவர்களுக்கும் கூட தேவன் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் அருளக் கூடும், அருளுவார் என்றும் அறிவித்தார் (அப். 5:31)!*

*ஸ்தேவான் இயேசுவை "நீதிபரர்" என்று கூறினார், இது*

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவுக்கான தெளிவான குறிப்பாகவும், அவ்வழி முறையிலேயே யூதர்கள் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு குறிப்பாகவும் இருந்தது (அப். 7:52). எத்தியோப்பிய மந்திரிக்குப் பிரசங்கிக்கும்பொழுது பிலிப்பு, ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தை விளக்கிக் கூறி, இயேசு, அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்பட்ட ஒரு ஆட்டைப் போலவும், மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடா திருக்கும் ஆட்டுக்குட்டியைப் போலவும் இருந்தார் என்றும் வெளிப்படுத்தினார் (அப். 8:30-35). இஸ்ரவேலரின் பிதாக் களுக்குத் தேவன் செய்திருந்த வாக்குத்தத்தங்கள் எல்லா வற்றையும் நிறைவேற்றியிருந்ததாகப் பவுல் அறிவித்தார் (அப். 13:32, 33). மற்றும் அவர், தாவீதின் குமாரர்களில் ஒருவர் மேசியாவின் அரியணையில் அமருவார் என்று தாவீதுக்குச் செய்யப்பட்ட வாக்குத்தத்தம் பற்றியும் பேசினார். இயேசுவின் மரணத்தினால் அந்த வாக்குத்தத்தம் அழிக்கப்படவில்லை, ஏனெனில் தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி யிருந்தார் என்று அவர் அறிவித்தார் (அப். 13:33-39). இந்த வாக்குத்தத்தங்கள் இயேசுவுக்குள் தரப்படும் நீதியினால் நிறைவேற்றமடைகிறது என்று பவுல் முடித்தார். யூதர் எவரும் நியாயப்பிரமாணத்தினால் நீதியை எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் கூறினார் (வ. 39).

நடபடிகளின் பிற்பகுதியில், அப். 2ல் உள்ள பெந்தெ கொஸ்தே நாளுக்கு ஏறக்குறைய இருபது வருடங்களுக்குப் பிறகு, விருத்தசேதனம் பற்றிய பிரச்சனையொன்று ஏற்பட்டு அதைப்பற்றி எருசலேமில் விசேஷித்த தொடர் கூட்டங்கள் நடத்தப்பட்டன (அப். 15). யூதப் பின்னணியிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்தின் நடைமுறைகளை, அதிலும் விசேஷமாக விருத்தசேதனம் முறைமையைப் பற்றிக் கொண்டிருந்தார்கள். கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற எல்லா ஆண்பிள்ளைகள் மேலும், புறஜாதியாரில் இருந்த வந்த எல்லா ஆண்கள் மேலும் அவர்கள் விருத்த சேதனத்தைக் கட்டுப்படுத்தினார்கள். பவுலும் பர்னபாவும் தங்களின் முதலாம் சுவிசேஷப் பயணத்தை முடித்திருந்தார்கள் (அப். 13; 14); அவர்களை அனுப்பியிருந்த சீரியாவின் அந்தியோகியாவிலிருந்த சகோதரர்களிடத்தில் அவர்கள் அறிக்கை தரும்போது, அவர்கள் விருத்தசேதனம் பற்றிய

பிரச்சனையை முகமுகமாய் எதிர்கொண்டார்கள். முந்திய மூன்று ஆண்டுகளில் அவர்கள் தங்கள் சுவிசேஷப் பயணத்தில் புறஜாதியாரை விருத்தசேதனம் செய்துகொள்ளும்படி கூறாமலேயே, ஞானஸ்நானப்படுத்தியிருந்தார்கள், இதை அங்கீகரிக்காத சில சகோதரர்கள் இக்கேள்வியை மறுபடியும் கிளறி விட்டார்கள். இயேசுவின் அரைசகோதரரும், எருசலேமின் முன்னோடிகளில் ஒருவருமாய் இருந்தவரான யாக்கோபு இந்த நிகழ்ச்சியில் தலைமை வகித்தார் என்பது தெளிவு (அப். 15:13-21). "தாவீதின் கூடாரம்" திரும்ப எழுப்பப்படும் என்ற ஆமோஸின் தீர்க்கதரிசனம் நிறைவேற்றமடைந்தது, எனவே புறஜாதியார்கள் எவ்விதத் தடையுமின்றி கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியத்திற்கு வரவேற்கப்பட்டார்கள் என்று அவர் கூறினார். இந்தத் தீர்க்கதரிசனமானது மேசியாவின் கீழ் உண்மையாய்த் தொழுது கொள்பவர்கள் தாவீதின் ஆவிக்குரிய குமாரனும், தாவீதின் அரியணையில் வீற்றிருப்பவருமான வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவின் ஆளுகையை ஏற்றுக் கொள்ளும் காலத்தை வாக்குத்தத்தம் செய்தது. இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியிருந்ததால் புறஜாதியார் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி கேட்பது அவசியமற்றதாயிற்று. இது விருத்தசேதனம் பற்றிய கேள்விக்கு விடையளித்தது: கிறிஸ்துவின் கீழ் இது அவசியமில்லாததாயிற்று.

இந்தப் பிரசங்கமானது நிச்சயமாகவே யூதர்களுக்குப் புதியதாய் இருந்தது, அவர்களின் முற்பிதாக்கள் 15 நூற்றாண்டுகளாக நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்து வந்திருந்தார்கள். நடபடிகளின் பிற்பகுதியில் உள்ளவைகள் பல யூதர்கள் பல சபைகளில் இதைப் பற்றிக் கலகம் ஏற்படுத்தியதைக் காட்டுகின்றன.

## அவர்களின் ஆராதனை வித்தியாசப்பட்டதாயிருந்தது

விருத்தசேதனச் சடங்குகள் கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் அவசியமற்றதாயிருந்தன. கிறிஸ்தவர்களான யூதர்கள் பஸ்கா, பெந்தெகொஸ்தே அல்லது கூடாரங்களின் பண்டிகை ஆகியவற்றைக் கடைப்பிடிக்கவில்லை. மிருக பலி, அறுவடை

*மற்றும் இதர காணிக்கைகளை அவர்கள் விட்டொழித்தார்கள். லேவி கோத்திர ஆசாரியத்துவத்தை அவர்கள் நோக்கவில்லை. தசமபாகத்தையும் அவர்கள் இனி நடைமுறைப் படுத்த வில்லை. இந்த நடைமுறைகளை அவர்கள் விட்டுவிட்டதால், கிறிஸ்துவின் புதிய பிரமாணத்தின்கீழ் அவர்கள் என்ன செய்தார்கள்?*

*இதை லூக்கா எளிமையாகக் கூறினார்: "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத் திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதி யாய்த் தரித்திருந்தார்கள்" (அப். 2:42). இப்பொழுது அவர்கள் சத்தியங்களுக்கு நியாயப்பிரமாணத்தையல்ல அப்போஸ்தலர் களையே நோக்கினார்கள். அவர்கள் பஸ்காவை அல்ல கர்த்தருடைய பந்தியையே புசித்தார்கள். தசம பாகம் கொடுக்கக் கீழ்ப்படிராமல் தங்கள் வரவுக்கும், எழுந்த தேவைகளுக்கும் தக்கதாகப் பணத்தையும் பொருள்களையும் (ஐக்கியப்பட்டிருத்தலையும்[1]) கொடுத்தார்கள். இயேசு கிறிஸ்துவுக்குள் அவருடைய நாமத்தின் மூலமாகவே ஜெபித்தார்கள்.*

*இந்த நடைமுறைகள் யாவும் அவர்களது ஆராதனையில் தீர்க்கமான மாற்றங்களாய் இருந்தன. நடபடிகளை கவனத் துடன் வாசிப்பவர்கள் பின்வரும் மாற்றத்தை/வித்தியா சத்தைக் காண்பார்கள்: அப்போஸ்தலர்களின் பிரசங்கித் தலினால் அவர்கள் மனந்திரும்பியிருந்தார்கள், அவர்கள் தங்களின் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானப் படுத்தப் பட்டிருந்தார்கள், தேவனுடைய ஐக்கியத்திற்குள் தேவனா லேயே அவர்கள் ஒன்று கூட்டப்பட்டிருந்தார்கள் (அப். 2:37-41). ஆகையால் அவர்கள் பன்னிருவரின் தலைமைத் துவத்தின் கீழ் இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே ஆராதித்தார்கள்.*

*இந்த வேளையில் ஆராதனையின் ஒரு பாகமாக நடபடி களில் குறிப்பிடப்படாதது இசைக்கருவிகளுடனான ஆராதனையாகும். முன்பு, இம்மக்கள் நியாயப்பிரமாணத்தின் கீழ் தங்களின் ஆராதனையில் இசைக்கருவிகளைப் பயன் படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இருந்தாலும், சபை தொடங்கிய பின், புதிய ஏற்பாட்டில் சபையார் யாவரும் சேர்ந்து வாயால் பாடுவதே இசை ஆராதனையாகப் புதிய*

ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டது. இந்த இசையானது ஒருவருக் கொருவர் புத்தி கூறவும், சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் ஆவிக்குரிய பாடல்களால் ஒருவருக்கொருவர் பேசிக்கொள் வதற்குமானதாகும். இந்த இசையானது பக்க வாட்டில் ஒருவருக்கொருவர் செயலாக்கம் செய்ததோடும், ஆராதனை செய்தவர்கள் தங்கள் இருதயங்களிலே கர்த்தரை/தேவனைப் பக்தியுடன் பாடிக் கீர்த்தனம் பண்ணியதால் (எபே. 5:19; கொலோ. 3:16) மேல் நோக்கியும் செயலாக்கம் கொண்டி ருந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட யூதர்களின் ஆராதனை யில் இது இன்னுமொரு மாபெரும் மாற்றமாக இருந்தது.

மனம் மாற்றமடைந்த ஒவ்வொரு யூதரும், தேவனுடைய புதிய சித்தமானது இயேசுவின் மூலமாகவும் அவருடைய அப்போஸ்தலர்களின் மூலமாகவும் விளக்கப்பட்டிருந்ததை உணர்ந்தார்கள். அது ஒரு உயரிய விருவிருப்பான நிகழ்ச்சியாக, மாற்றமாக மற்றும் உணர்வெழுச்சியாக இருந்த காலமாயிற்று.

## அவர்களுடைய புரிந்து கொள்ளுதலும் தெளிவாய் இருந்தது

தற்காலிகமானதும், மேற்கொள்ளப்படுமென்ற வாக்குத் தத்தத்தைத் தனக்குள்ளேயே கொண்டிருந்ததுமான (எரே. 31:31, 32) நியாயப்பிரமாணத்தினால் யூதர்கள் நீதிமான்கள் களாக்கப்பட முடியாதிருந்தது. கிறிஸ்து பிரதான ஆசாரியராக வும் அரசராகவும் ஆனபோது (எபி. 8:1-13) அந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது இஸ்ரவேல் நாட்டாருக்காக மட்டுமே வடிவமைத்துத் தரப்பட்டது (யாத். 34:27, 28); அது எல்லா மக்களுக்குமான உலகளாவிய பிரமாணமாக ஒருபொழுதும் வடிவமைக்கப்படாதிருந்தது.

இயேசு வரும் வரைக்கும் உதவுவதற்காக நியாயப் பிரமாணமானது யூதர்களுக்குத் தரப்பட்டது (கலா. 3:19). அது ஒரு “பள்ளி ஆசிரியராக” அல்லது “உபாத்தி”யாக இருந்தது (கலா. 3:24). கிறிஸ்துவின் சுவிசேஷம் மோசேயின் பிரமாணத் திற்கு மாற்றாக வெளிப்படுத்தப்பட்ட போது (கலா. 3:24, 25) இந்த நியாயப்பிரமாணமானது ஒதுக்கி வைக்கப்பட்டது. ஆபிரகாமுக்குத் தரப்பட்ட இரட்சிப்பின் வாக்குத்தத்தத்

*தினுடைய பாகமாக பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் இருந்த தில்லை; அது அப்படியிருந்திருந்தால், தேவன் தமது மக்களை இரட்சிக்க அதைப் பயன்படுத்தியிருந்திருப்பார் (கலா. 3:21, 22). மேலும், இந்தப் பிரமாணமானது காளைகள் மற்றும் வெள்ளாடுகளின் இரத்தத்தினால் பாவநிவாரணத்தைத் தர முடியாதிருந்தது (எபி. 10:4).*

*இந்தப் பிரமாணமானது கிறிஸ்துவினால் நிறைவேற்றப் பட்டது (லூக். 24:44, 45), அவரது மரணத்தில் இது ஒழிக்கப் பட்டது (எபே. 2:15), அவர் சிலுவையில் அறையப்பட்ட போது இது வழியிலிருந்து எடுபட்டுப் போயிற்று (கொலோ. 2:14) மற்றும் இது "பழமை"யானதும் நாள் பட்டதுமாக்கப் பட்டது (எபி. 8:13). இயேசுவின் சிலுவை மரணத்தினால் யூதர்கள் நியாயப்பிரமாணத்திலிருந்து பிரிக்கப்பட்டார்கள் அல்லது அதற்கு மரிக்கப் பண்ணப்பட்டார்கள். யூதர்கள் ஆவிக்குரிய வகையில் கிறிஸ்துவுடன் இணைக்கப்படக் கூடுவதற்காக இது நிறைவேற்றப்பட்டது (ரோமர் 7:4).*

## முடிவுரை

*கிருபை மற்றும் மன்னிப்பிற்கான ஆவிக்குரிய வாக்குத் தத்தங்கள் எல்லாவற்றின் நிறைவேற்றத்தையும் நடபடிகள் என்ற வரலாற்றுப் புத்தகத்தில் இப்பொழுது காண முடியும். கிறிஸ்தவர்கள் "உலகத்தின் முடிவு காலத்தில் உள்ளவர்களாய்" இருக்கின்றார்கள்; அதாவது, கிறிஸ்தவர்கள் இரட்சிப்பின் மிகப் பல ஆசீர்வாதங்களைப் பெறுகின்றார்கள் (1 கொரி. 10:11). இயேசுவைப் பின்பற்றுபவர்கள் மீது இந்த ஆசீர்வாதங் கள் குவிக்கப்பட்டுள்ளன.*

*தேவனுடனான ஐக்கியத்திற்குள் உள்ள "புதிதும் ஜீவனுள் ளதுமான மார்க்கமானது'' இயேசுவின் இரத்தத்தினால் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது (எபி. 10:19, 20). தேவனுடைய வீட்டின்மேல் ஒரு புதிய, மாபெரும் ஆசாரியர் நியமிக்கப் பட்டுள்ளார்: அவர் இயேசு கிறிஸ்துவே ஆவார் (எபி. 10:21). புதிய உடன்படிக்கையினால் ஒவ்வொரு கிறிஸ்தவரும் தேவனு டைய சந்நிதானத்தில் பிரவேசிக்க முடிகின்றது (எபி. 10:19-22). ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆசாரியரென்று கருதப்படுகின்றார், அவரால் தேவனுக்கு ஏற்புடைய பலியைச் செலுத்த*

*முடிகின்றது (1 பேது. 2:5, 9).*

*இப்பொழுது பாவமன்னிப்பும் ஐக்கியமும் கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையில் காணப்படுகின்றன. எல்லா மக்களுக்கும் இரக்கமும் மன்னிப்பும் அந்த உடன்படிக்கைக் குள்ளாகவே இருக்கின்றது (எபி. 8:10-12). இனி பாவங்கள் நினைக்கப்படாது என்பதால், தேவனுடைய மன்னிப்பிற்குள் வாசம் செய்வதென்பது எவ்வளவு அற்புதமானது!*

*மகிமையுள்ள இம்மாற்றங்களைச் செயல் விளக்கப் படுத்தும் ஒரே வரலாற்றுப் புத்தகமாக நடபடிகள் உள்ளது. கிறிஸ்துவின் புதிய பிரமாணத்துடன் புதிய ஆசீர்வாதங்களும், மதச் செயல்பாடுகளில் புதியதொரு அமைப்பும், இவ்வுலகை விட்டுச் செல்லும் போது நமக்கு தேவனுடன் வாழ்க்கை உண்டு என்ற உறுதிப்பாடும் வந்துள்ளன.*

---

குறிப்பு

*[1]"ஐக்கியம்" பற்றிய கலந்துரையாடலில் காணவும்.*